சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06-ம் நாள் வியாழக்கிழமை

<u>அசல் வழக்கு எண். 129/2019</u>

<u>CNR No.TNTH050004312019</u>

1. P.குழந்தை தெரசு (*)(இறப்பு)(*)
2. (*) P.கிளாரா
3. (*) P.ஆரோக்கிய ஜெயசீலன .... வாதிகள்

(*) தாவா நிலுவையில் இருக்கும்போது வாதி இறந்துவிட்டபடியால் அவரது சட்டப்படியான வாரிசுகளான 2 மற்றும் 3ம் மனுதாரர்கள் இ.ம.எண்.1/2023 ல்(Or.22 R.3 and Sec.151 of CPC) மனுவை தாக்கல் செய்து, அது இந்நீதமன்றத்தில் கடந்த 05.03.2024ல் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த தாவாவில் 2 முதல் 4 வாதிகளாக சேர்க்கப்பட்டு, பின்னர் இ.ம.எண்.2/2025ல்(Or.6R.17) 26.09.2025ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டு தாவாவில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

/எதிர்/

P. அமலஜீவா ... பிரதிவாதி

இவ்வழக்கு 10.072026ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

1ம் வாதிக்கு பிரதிவாதி பிராது தொகையான ரூ.2,71,333.20/-மும் அசல் தொகை ரூ.2,00,000/-க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1.00 வீதம் வட்டியும் செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிகளுக்கு பிரதிவாதி செலுத்தக்கோரியும் 1ம் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>

1ம்வாதியிடம், பிரதிவாதி அவரது அவசர நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் வேண்டி கடந்த 01.05.2016 தேதியன்று கடனாக ரூ.2,00,000/– கடன் பெற்று கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக மாதம் 1 க்கு ரூ.100/–க்கு, ரூ.1.00 வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும் அசலும் வாதி வேண்டும் போது 1ம் வாதியிடமாவது அல்லது 1ம் வாதியின் உத்திரவு பெற்றவர்களிடமாவது ரொக்கம் செலுத்தி வைப்பதாக ஒப்புக்கொண்டு 1ம் வாதிக்கு பிரதிவாதி, அவரது வீட்டில் வைத்து 1 லட்சத்திற்கு 1 புரோநோட்டு வீதம் 2 புரோ நோட்டுகள் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதி அதன்பின்னர் அசல் மற்றும் வட்டித்தொகையை செலுத்தக்கோரி வாதி நேரில் சென்றும், ஆட்கள் மூலம் துயர்ந்தும், கேட்டதில் பிரதிவாதி யாதொரு தொகையையும் செலுத்தாமல் செலுத்தி விடுவதாகவே கூறி வீண் காலம் கடத்தி வந்தார் என்றும், அதனால் 1ம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் 28.02.2019 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், பிரதிவாதி அதை 01.03.2019 ம் தேதி பெற்றுக்கொண்டு பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றும், எனவே, 1ம் வாதியால் பிராதில் கண்ட தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் திரும்பப்பெற வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் வாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் இவ்வழக்கில் 2 மற்றும் 3ம் வாதிகளாக புதிதாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர்.

3) பிரதிவாதி தரப்பில் அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

4) <u>பிரச்சனை மற்றும் அதற்கான தீர்வு</u>

வாதிகள் கோரியுள்ள பரிகாரம் செலவுத்தொகையுடன் கிடைக்கக்கூடியதா?

5) வாதிகளின் தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் 3ம் வாதி ஆரோக்கிய ஜெயசீலன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 01.05.2016 ம் தேதிய 1ம் வாதிக்கு பிரதிவாதி எழுதிகொடுத்துள்ள பிராமிசரி நோட்டு வா.ச.ஆ, 1 ஆகவும், 28.02.2019 ம் தேதிய 1ம் வாதி, தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு, அஞ்சல் ரசீதுடன் வா.சா.ஆ.2 ஆகவும், 01.03.2019 ம் தேதிய ஒப்புதல் அட்டை கவர் வா.சா.ஆ.3 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், புரோநோட்டை பூர்த்தி

செய்த ஜஸ்டின் பிரபாகரன் வா.சா.2 ஆகவிசாரிக்கப்பட்டுள்ளார்.

6) மேலும், மேற்படி வா.சா.1 மற்றும் வா.சா.2–ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் வாசாஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான, ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது பிரதிவாதி கடந்த 01.05.2016 ம் தேதியில் அவரது அவசர நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் இறந்து போன 1ம் வாதி ரூ.2,00,000/–ஐ கடனாக ரொக்கம் பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1, புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ள விபரம் மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது.

7) ஆனால், வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்து வாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்துள்ள நிலையில், பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி வாதிகளின் வழக்கை (Rebuttal) மறுத்தளித்து வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை என்பது தெரிய வருகிறது.

8) எனவே, வாதிகள் தரப்பு வா.சா.ஆ.1 , வா.சா.2 வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவண சாட்சியங்கள் மூலமும் பிரதிவாதி கடந்த 01.05.2016 ல் ரூ.2,00,000/– 1ம் வாதியிடம் கடன் பெற்று கொண்டு அதற்கு ஆதாரவாக வா.சா.ஆ. 1 கடன் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார், 1ம் வாதி இறந்தபின்னர் அவரது வாரிகளிடம் பிரதிவாதி அசல் மற்றும் வட்டித்தொகையை திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் தீர்மானித்து வாதிகள் கோரியுள்ள பரிகாரம் செலவுத்தொகையுடன் கிடைக்கத்தக்கது என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9) மேலும், 1ம் வாதி பிராதில் ரூ.100–க்கு ரூ.1 வீதம் 12 சதவீத வருட வட்டி கோரியிருந்தாலும் வழக்கின் தன்மை மற்றும் பிரதிவாதியுடைய சமூக பொருளாதார சூழ்நிலை ஆகியவற்றை பரிசீலனை செய்யும்போது, வாதிகளுக்கு 9 சதவீத வட்டி வழங்குவதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10) இறுதியாக, வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி வாதிகளுக்கு ரூ.2,71,330/–(Rounded off)மும் அசல் தொகை ரூ.2,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை

முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 06.08.2026 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

வாதிகள் தரப்பு சாட்சி

வா.சா.1 – ஆரோக்கிய ஜெயசீலன் (3 ம் வாதி)

வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.05.2016 | 1 ம் வாதிக்கு பிரதிவாதி எழுதிகொடுத்துள்ள பிராமிசரி நோட்டுகள்(எண்ணம்–2) | அசல் |
| வா.சா.ஆ.2 | 28.02.2019 | 1 ம் வாதி, தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு, அஞ்சல் ரசீதுடன் | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 01.03.2019 | ஒப்புதல் அட்டை | அசல் |

பிரதிவாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்

– இல்லை –

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

OS.129/2019
சீரான தீர்ப்புரை
நாள்: 06.08.2026

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06–ம் நாள் வியாழக்கிழமை

<u>அசல் வழக்கு எண். 129/2019</u>

<u>CNR No.TNTH050004312019</u>

1. தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, இராயப்பன்பட்டி கிராமம், S.U.M. பள்ளி தெரு, கதவு எண். 241, என்ற முகவரியில் குடியிருக்கும் பெர்னத் ராஜ் அவர்களின் மனைவி, கிறிஸ்துவர், சுமார் 69 வயதுள்ள P.குழந்தை தெரசு (*)(இறப்பு)(*).

2. திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுகா, பாலக்குறிச்சி 7/652 பாரதியார் நகர் என்ற முகவரியில் வசித்து வரும், அருள்சாமி அவர்களின் மனைவி கிறிஸ்துவர் சுமார் 53 வயதுள்ள (*) P.கிளாரா.

3. தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, இராயப்பன்பட்டி கிராமம், 24D1/W–2, S.U.M. பள்ளி தெரு, என்ற முகவரியில் குடியிருக்கும் பெர்னத் ராஜ் அவர்களின் மகன் கிறிஸ்துவர், சுமார் 43 வயதுள்ள(*) P.ஆரோக்கிய ஜெயசீலன்.

.... வாதிகள்

(*) தாவா நிலுவையில் இருக்கும்போது வாதி இறந்துவிட்டபடியால் அவரது சட்டப்படியான வாரிசுகளான 2 மற்றும் 3ம் மனுதாரர்கள் இ.ம.எண்.1/2023 ல்(Or.22 R.3 and Sec.151 of CPC) மனுவை தாக்கல் செய்து, அது இந்நீதமன்றத்தில் கடந்த 05.03.2024 ல் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த தாவாவில் 2 முதல் 4 வாதிகளாக சேர்க்கப்பட்டு, பின்னர் இ.ம.எண்.2/2025 ல்(Or.6R.17) 26.09.2025 ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டு தாவாவில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

/எதிர்/

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், இராயப்பன்பட்டி கிராமம், வார்டு–2, சண்முகந்தி ரோட்டில் வசித்து வரும் ஜெஜோ அவர்கள் மனைவி கிறிஸ்டின் சுமார் 45 வயதுள்ள P. அமலஜீவா ... பிரதிவாதி

1ம் வாதிக்கு பிரதிவாதி பிராது தொகையான ரூ.2,71,333.20/–மும் அசல் தொகை ரூ.2,00,000/–க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை மாதம் ஒன்றுக்கு

ரூ.100/-க்கு ரூ.1.00 வீதம் வட்டியும் செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிகளுக்கு பிரதிவாதி செலுத்தக்கோரியும் 1ம் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு எழுந்த நாள் | - | 22.04.2019 |
| வழக்குமூலம் எழுந்த நாள் | - | 01.05.2016, 28.02.2019, 01.03.2019 ஆகிய தேதிகளில் இராயப்பன்பட்டி கிராமத்தில் உற்பத்தி. |
| தாவா மதிப்பு | - | ரூ.2,71,333.20/- |
| நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | - | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 22-ன் படி ரூ.8,140/- செலுத்தப்பட்டுள்ளது, |

இவ்வழக்கு 10.072026ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

தீர்ப்பாணை

| | |
|---|---|
| 1 | இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. |
| 2 | பிரதிவாதி வாதிகளுக்கு ரூ.2,71,330/-(Rounded off)மும் அசல் தொகை ரூ.2,00,000/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 3 | இவ்வழக்கின் செலவுத்தொகை ரூ.10,170/-ஐ வாதிகளுக்கு பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |

செலவுத்தொகைப்பட்டியல்

| | | | வாதி தரப்பில் | பிரதிவாதி தரப்பில் |
|---|---|---|---|---|
| 1 | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | : | 8140.00 | |
| 2 | வக்காலத்து நாமாவுக்கு | : | 10.00 | |
| 3 | பிறாசஸ் தயாரித்தல் பீஸ் | : | 10.00 | |
| 4 | போஸ்டல் ரிஜிஸ்தர் நோட்டீஸ் | : | 50.00 | செலவுத்தொகைப்பட்டில் தாக்கல் செய்யப்படவில்லை |
| 5 | லாயர் ரிஜிஸ்தர் நோட்டீஸ் சார்ஜ் | : | 1000.00 | |
| 6 | வழக்கறிஞர் கட்டணம் (ஜீனியர்) | : | 1000.00 | |
| | மொத்தம் | | 10170.00 | |

2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06–ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது,

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

OS.129/2019
தீர்ப்பாணை
நாள். 06.08.2026